செ.வெ.எண்:-62/2020 நாள்:25.04.2020

**திண்டுக்கல் மாவட்டம்**

**திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரம் செயல்படும் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு கட்டுப்பாட்டு அறை எண்களுக்கு வந்த 1350 அழைப்புகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கை தொடர்பாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்விட தலைமையர்(Incident Commander) ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுக்கும் வகையில் தமிழக அரசு வழங்கும் அனைத்து உத்தரவுகளையும் திண்டுக்கல் மாவட்டத்தில் செயல்படுத்தும் வகையில் காவல்துறை, சுகாதாரத்துறை, வருவாய்த்துறை மற்றும் அரசின் பல்வேறுபட்ட துறைகள் மூலம் கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்க அனைத்து தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடங்கப்பட்டதில் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு கட்டுபாட்டு அறை அமைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு 16 மருத்துவர்கள், சுகாதார அலுவலர்கள், கிராம செவிலியர்கள், மன நல ஆலோசகர்கள், டேட்டா என்ட்ரி ஆபரேட்டர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் சுழற்சி முறையில் 24 மணி நேரமும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களிடம் இருந்து உதவிகள் மற்றும் புகார்கள் தொடர்பாக வரும் அழைப்புகளை இங்குள்ள அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் ஆலோசனை பெற்று உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு தெரிவித்து வருகின்றனர். இந்த கட்டுப்பாட்டு அறைக்கு தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கான மன நல ஆலோசனை கோருதல், மருத்துவ உதவி, ஆதரவற்றோருக்கு உணவு வழங்க கோருதல், சமூக இடைவெளியை கடைப்பிடிக்காமல் தெருக்களில் சுற்றித்திரிவோர் குறித்த புகார்கள் மற்றும் ஊரடங்கு தொடங்கிய காலங்களில் வாகனம் இன்றி சாலைகளில் நடந்து செல்வோர் குறித்த புகார்கள் என இதுவரை 1350 அழைப்புகள் வரப்பெற்றன. அழைப்புகள் மூலம் வரப்பெற்ற கோரிக்கைகள் மற்றும் புகார்கள் அனைத்தும் உடனடியாக சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டு உடனடியாக தீர்வு காணப்பட்டுள்ளன.

உதவிகள் மற்றும் புகார்களை 0451-2460320, 1077 ஆகிய தொலைபேசி எண்களிலோ, 94999 33850, 94999 33851 என்ற கைப்பேசி எண்ணிலோ தொடர்புகொண்டு தெரிவித்து தீர்வு கண்டு பயன்பெறலாம்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுத் திட்டம்(Containment Plan) தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிய தேவைகள், காய்கறி, மளிகை மற்றும் மருந்துப்பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை கொண்டு செல்லுதல் மற்றும் அத்தியாவசிய சேவைகள் வழங்குதலில் உள்ள நடைமுறை பிரச்சனைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட்டு வருகிறது.

வெளிமாநில தொழிலாளர்கள் தங்குமிடம், உணவு மற்றும் இதர வசதிகள், வெளி மாநிலத்தில் தங்கியிருக்கும் தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் விபரங்கள், தன்னார்வ தொண்டர்கள் மற்றும் உதவி செய்ய தயாராக உள்ளோர் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதி குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது, வட்ட அலுவலக கட்டுப்பாட்டு அறையில் பெறப்பட்ட புகார்களுக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது. வருவாய்த்துறை மற்றும் பிற துறைகளில் உள்ள அலுவலர்களின் மனிதவளம் முழுமையாக பயன்படுத்தப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி, பழனி சார் ஆட்சியர் டாக்டர் உமா, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு.ராஜ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

---